மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 30—10—60 ஒலி 52

புரட்சி நடிகர் 5,00000 தரவேண்டும்!

★★★

"1962-ல் வர இருக்கின்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ்தான் வெற்றி பெறும்—யார் ஒன்று சேர்ந்தாலும் காங்கிரஸ் கட்சியை அசைக்க முடியாது" என்று நமது முதலமைச்சர் கனம் காமராஜர் நமக்கெல்லாம் ஓர் சவால் விடுத்திருக்கிறார்!

அந்த சவாலை நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் மிக்கத் துணிவோடு — திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்!

நமது முதலமைச்சர் கனம் காமராஜர் எந்தத் துணிச்சலோடு நமக்கு சவால் விடுததாரோ, அதே துணிச்சலோடுதான் நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனும் அந்த சவாலை ஏற்றுக கொண்டிருக்கிறார்!

டாட்டா இருக்கிறார், டால்மியா இருக்கிறார்—பிர்லா இருக்கிறார், கோயங்கா இருக்கிறார்—ஆலை அரசர்கள் இருக்கிறார்கள், அருமை நண்பர் செட்டிநாட்டு ராஜா முத்தையா இருக்கிறார்—பூண்டி வாண்டையார் இருக்கிறார், உக்கடைத் தேவர் இருக்கிறார்—வடபாதி மங்கலம் இருக்கிறார், நெடும்பலம் இருக்கிறார்—குன்னியூர் அய்யர் இருக்கிறார், சீர்காழி முதலியார் இருக்கிறார்—கபிஸ்தலம் மூப்பனார் இருக்கிறார், தரணி புகழ் தஞ்சை ஆரோக்கிய சாமி இருக்கிறார்—"நான் இருக்க பயமேன்" என்ற சாயி பாபா தந்த பொன்மொழியும் இருக்கிறது என்ற காரணததால் நமது முதலமைச்சர் கனம் காமராஜர் நமக்கு சவால் விடுத்திருக்கிறார்!

நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனோ— நடிப்புக் கலை இருக்கிறது, நல்ல கருத்தாழம் பொதிந்த நாடகமிருக்கிறது—அதை நடித்துக்காட்ட மேடை இருக்கிறது—அதைப் பார்க்க திரள் திரளாக மக்கள் இருக்கிறார்கள்! அன்பு இருக்கிறது, மக்களிடத்தில் நல்ல பாசமிருக்கிறது — உள்ளத்திலே உறுதி இருக்கிறது, நெஞ்சிலே நல்ல கொள்கை இருக்கிறது—அறிஞர் அண்ணாவின் அழகு தமிழ் இருக்கிறது, அதைப் பேச ஆற்றல் படைத்த வாயும் இருக்கிறது—"அன்பு வெல்லுமா, அதிகாரம் வெல்லுமா—இரும்புப் பெட்டியில் உள்ள பச்சை நோட்டுகள் வெல்லுமா—நல்ல இதயம் படைத்தவர்களின் எண்ணம் வெல்லுமா—அதையும்தான் பார்த்து விடுவோமே" என்ற காரணத்தால் அந்த சவாலை மிக்கத் துணிவோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்!

என்னதான் ஜனநாயகத்திற்கு மிக்க வலிவான சக்தி இருந்த போதிலும், அந்த ஜனநாயகத்தை பணநாயகத்தால் சுட்டு வீழ்த்தி விடமுடியும் என்ற நிலை இந்த நாட்டில் இன்னமும் இருந்து வருகின்றது!

வறுமையின் வாட்டத்தால் வாழ்விழந்து கிடக்கும் மக்களிடம் நோட்டுகளை நீட்டி அவர்களின் மானத்தையே பறிக்கும் கயமைத்தனம் இந்த நாட்டில் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன! பணமிருந்தால் போதும் பதவி தானாகவே கிடைக்கும் என்ற நிலை இன்னமும் இந்த நாட்டை விட்டுத் தொலையவில்லை!

இந்த காரணத்தால்தான் — கொடுமை மணத்திலேயே பிறந்து, கொடுமை மணத்திலேயே வளர்ந்து, கொடுமை மணத்திலேயே வளம்பெற்று, கொடுமை மணத்திலேயே நாட்டை ஆட்சி புரிந்து வரும் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகளாக ஆட்சி பீடத்தில் அமர்ந்தபடியே இருந்து வருகிறது! ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்று வருகிறது!

நாட்டில் வளமில்லை—காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெறுகிறது!

நாட்டிலே சோறு இல்லை—என்றாலும் காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெறுகிறது!

பஞ்சத்தால், பசியால் மக்கள் துடிதுடிக்கிறார்கள்— என்றாலும் காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெறுகிறது!

உப்பு விலை ஏறிவிட்டது, அரிசி விலை விஷமாகி விட்டது, புளி கிடைக்கவில்லை, மிளகாய் ஏழைகளுக்கு காரமாகி விட்டது! என்றாலும் காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெறுகிறது!

இதற்கெல்லாம் என்ன காரணம்? ஆராய்ந்து பார்த்தால்—எல்லாம் பணம், பணம், பணம்தான்!

பணமிருந்தால் கொடியை நாட்டலாம், கோட்டைக்குள் நுழையலாம், ஆட்சியை கைப்பற்றலாம், அதிகாரம் செலுத்தலாம், அக்கிரமங்கள் பலவும் புரியலாம்! இதைக் கேட்பாரில்லை, தடுப்பாரில்லை!

அந்தப் பணத்தை அள்ளித் தரும் கோமான்கள் அங்கே இருக்கும் காரணத்தால் தான் காமராஜர் துள்ளிக் குதிக்கிறார், தோள்தட்டிப் பாய்கிறார்!

அந்தப் பாய்ச்சலை அடக்கத்தான் நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் முன் வந்து காணிக்கை செலுத்தி இருக்கிறார்! ஐந்தாயிரம் வெண் பொற்காசுகளை அச்சாரமாகத் தந்திருக்கிறார்! "இன்னும் தருகிறேன்" என்று கூறி காங்கிரஸ்காரர்களின் இதயத்திலே செந்தணலை மூட்டி இருக்கிறார்!

காமராஜர் கையிலிருக்கும் காசுகள் மக்களின் மானத்தைப் பறிக்கும், அவர்களின் உரிமைச் சீட்டை இழக்கவைக்கும்!

நம்மிடமிருக்கின்ற காசுகள் மக்களுக்கு எழுச்சியை ஊட்டும், உணர்ச்சியை உண்டாக்கும், அடிமைத்தனத்தை உடைக்கும்!

நாம், தேர்தலுக்கு நிதி சேர்ப்பது, மாடுகளைப் போல் மக்களின் உரிமைச் சீட்டை விலை கொடுத்து வாங்க அல்ல!

காங்கிரஸ் கட்சியின் பித்தலாட்டத்தை அம்பலப் படுத்த, ஏழை அபேட்சகர்களுக்கு செலவு செய்யத்தான்!

சென்ற தேர்தலில், வாய்ப்புள்ளபல இடங்களை இழந்ததற்கு காரணமே நம்மிடம் பணமில்லாததுதான் என்பதை நாம் அறிவோம்! அந்த நிலை இந்தத் தேர்தலில் கொஞ்சமும் இருக்கக் கூடாது! இருக்காது என்பதுதான் நம்முடைய பெரும் நம்பிக்கையாகும்!

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்—இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, வலையாபதி முத்துக் கிருஷ்ணன் போன்ற கலைஞர்களின் பெரும் துணையோடு ஒரு பெரும் தொகையை அளிப்பார் என்பதில நமக்கு துளியும் சந்தேகமில்லை!

அறிஞர் அண்ணா அவர்கள் கேட்கும் ஐந்து இலட்சத்தை அளிக்கவும தயங்கமாட்டார்! ஆனால் அது டாட்டா கட்சிக்கும், நமக்கும் ஏதும் வித்தியாசமில்லாமல் போய்விடும்! எனவே புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், அந்த ஐந்து இலட்சத்தை கலையுலகிலேயே வசூலித்துத் தரவேண்டும் என்பதே நமது பெரும் ஆசையாகும்!

"கலையுலகத்தின் சேவை எங்கள் இலட்சிய உலகத்

(8ம் பக்கம் பார்க்க).

கழகம் இன்றுவரை எந்தக் கட்சியுடனும் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை !

பத்திரிகைச் செய்தியைக் கண்டே காமராஜர் கலங்குகிறார் !

தென்னகத்தின் விடுதலைக்காக பாடுபடுவதாக உறுதி தந்தால் தேர்தலில் காங்கிரசை நான் ஆதரிக்கிறேன் !

பண பலத்தைக் கொண்டு மீண்டும் பதவியில் அமர காங்கிரஸ் எண்ணுகிறது !

இதை முறியடிக்க எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வாரீர்!

சென்னையில் அறிஞர் அண்ணா முழக்கம்

62வது வட்டம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நினைவு மன்ற மூன்றாவது ஆண்டு நிறைவு விழா, பெரியமெட் பாரக்ஸ் ரோட்டிலுள்ள மைதானத்தில் 23-10-60ம் தேதி மாலை 6 மணிக்கு ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு திருமதி வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கூட்ட ஆரம்பத்தில் பல தோழர்கள் இயக்க கீதங்கள் முழங்கினார்கள்.

தலைவர் முன்னுரையாகப் பேசும் போது, கழகத்தின் கொள்கைகள் இன்று தென்னகமெங்கும் பரவி வருவதைப்பற்றியும், அதை மாற்றார் இழித்துப் பழித்துப் பேசிவருவதுடன் பலாத்கார முறையையும் கையாண்டு வருவதி பற்றியும், அதைக் கண்டு நாம் மனமதளர்ந்து விடக் கூடாதென்றும், வசையாலோ, பழித்துப் பேசுவதாலோ, பலாத்காரம் செய்வதாலோ ஒரு இயக்கம், அதன் இலட்சியம் அழிந்துவிடாதென்றும், இன்று தென்னகத்திலுள்ள மக்கள் முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை — இலட்சியத்தை தங்கள் உயிர் லட்சியமாகக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள் என்றும் கழகத்தை இனி யாராலும் எந்த செய்கையாலும் அழித்தி விட முடியாதென்றும், நமது நாடு விடுதலையடைந்து தனி சுதந்திர திராவிட நாடாக திகழவேண்டுமென்றும், அதற்காக நமது அண்ணா அவர்கள் தலைமையில் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்றும், இன்று நம்மை ஆளுகின்ற வடநாட்டு ஆட்சியாளர்கள் நமது நாட்டைப்பற்றி அக்கறை கொள்ளாது புறக்கணித்து வருகிறார்கள் என்றும், வடநாட்டு நன்மைக்காகவே எல்லா சலுகைகளையும் செய்து வருகிறார்கள் என்றும், வடநாட்டு அரசினரால் திட்டப்பட்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் பிடியிலிருந்து விலகி நம் நாட்டை நாமே ஆள்வதற்காக நாம்பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.



பின்னர் 62 வது வட்ட நகராண்மைக் கழக உறுப்பினர் திரு. கபாலி, மாவட்டச் செயலாளர் திரு. மணிவண்ணன், திரு. ஆரிய சங்காரன் முதலியவர்கள் கழகத்தின் நோக்கங்களையும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னகத்தை எப்படிப் புறக்கணித்து இருக்கிறார்கள் என்பது பற்றியும், கழகத்தைப்பற்றி மாற்றார்கள் கூறி வரும் பொய்யுரைகளைப்பற்றியும், நகர மன்றத்தில் தி. மு. க. செய்த பணிகளைப் பற்றியும், காங்கிரசார் கழகத்தின் வளர்ச்சிகண்டு அஞ்சி, அதை அழிக்க பல முயற்சிகள் செய்து வருவதைப் பற்றியும் விளக்கினார்கள்.

பின், கழகப் பொதுச் செயலாளரும், தென்னகத்தின் தனி பெரும் தலைவருமான அறிஞர் அண்ணா அவர்கள் பெருத்த ஆரவாரத்திற்கிடையே பேசியதாவது :—

அன்புள்ள தலைவர் அவர்களே ! தாய்மார்களே ! நண்

அரசியல் கண்ணியத்தையும், நாகரீகத்தையும் கையாண்டே கழகம் வளர்ந்திருக்கிறது !

அதைக் குலைக்க யாராவது எண்ணினால் அதைவிட அவமானம் எனக்கு வேறு எதுவும் கிடையாது !

பல இன்னுயிர்களை பலி கொடுத்தே விடுதலை இயக்கங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன !

அண்ணா பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

பர்களே ! பெரியோர்களே !

இன்று இந்த வட்டத்தில் கலை உலகிலிருந்து கொண்டு கலைக்காகவும், நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும் அரும்பாடுபட்டு உழைத்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பெயரால் ஒரு மன்றத்தை நிறுவி, அதன் ஆண்டு விழாவை நல்ல முறையிலும், சீரும் சிறப்புடனும் நடத்துகிறீர்கள். இதில் என்னைக் கலந்து கொள்ளச் செய்த நண்பர்களுக்கு எனது நன்றியையும், மகிழ்ச்சியையும் உள்ளன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று வட்டத்திலுள்ள நண்பர்கள் இந்தக் கூட்டத்தை மிகவும் சிரமப்பட்டு நல்லமுறையில் பெரிய அளவில் நடத்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் முயற்சிக்கும், அவர்களது ஆர்வத்திற்கும் இடைஞ்சல் ஏற்படும் வகையில் மழை வந்து விரட்டிக் கொண்டிருக்கிறது. இதைக் கண்டு நான் மிகவும் வருத்தப்படுகிறேன், ஆனால் மறுகணம் சொந்த நலனைக் கருதும்போது மகிழ்ச்சியடைகிறேன்.

நான் கடந்த 15ந் தேதியிலிருந்து இன்றுவரை பல மாவட்டங்களுக்கும் சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்துவிட்டு வந்திருக்கிறேன். தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசி முதலிய இடங்கட்கு சென்றுவிட்டு அலுப்புடன் வந்திருக்கிறேன். நீங்கள் எனக்கு ஓய்வு தர இணங்காவிட்டாலும், இயற்கை எனக்கு ஓய்வு தரக் கருதியே மழையைத் தந்திருக்கிறது! அதற்கு நான் நன்றி செலுத்த வேண்டியதுதான்.

இன்று அரசியலில் பெரும் நெருக்கடியும், தொல்லைகளும் ஏற்பட்டு வருகிறது. அதைக் கண்டு மனக் கிலேசமோ, அச்சமோ கொள்ளக்கூடாது. நண்பர் ஆரிய சங்காரன் இன்று மாற்றுக் கட்சிக் காரர்களும், அதிகாரிகளும் கழகத் தோழர்களைத் தொல்லைப் படுத்துவதாகவும், பல வழக்குகள் போட்டு இம்சிப்பதாகவும், இன்று கழகத் தோழர்கள் கூட்டத்திற்குப் போய் வந்தாலும் தாக்குவதாகவும் ஆத்திரத்தோடு கூறினார்.

நான் இன்று உங்களுக்கு எப்பொழுதும் கூறுவதுபோலவே இன்றும் கூறுகிறேன், அரசியலில் ஈடுபடுவதென்றால், அரசியல் கட்சிகளில் பங்கேற்றுக் கொள்வதென்றால் பல இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் தாங்கும் மனவலிவோடுதான் வரவேண்டும்.

இன்று இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். மழை வந்துவிட்டது. அதனால் நமக்கு இடைஞ்சல்களும், தொல்லைகளும் ஏற்படுகின்றன. அதற்காக நாம் என்ன செய்வது? யார் மீது கோபப்படுவது?

கலகம் செய்தாலும், பலாத்காரம் செய்தாலும் அதையெல்லாம் கண்டு நாம மனம்தளர்ந்து விடக்கூடாது.

எது வந்தாலும் சரி, எந்தவித இன்னல்கள், ஆபத்துக்கள் வந்தாலும் சரி அதைத் தாங்கிக் கொள்ளும் பண்பு நமக்கிருக்க வேண்டும். இதற்கெல்லாம் ஆத்திரப்பட்டு விட்டால்—பொறுமை இழந்துவிட்டால் எதிர்காலத்தில் நமக்கு வர இருக்கும் தொல்லைகளை எப்படி சமாளிக்க முடியும்? ஆகவே நான் உங்களுக்கெல்லாம் கூற ஆசைப்படுவதெல்லாம் இந்த சிறு சச்சரவுகளைக் கண்டு ஆத்திரப்படாதீர்கள். நமக்கு நமது இலட்சியம்தான் பெரிது. அந்த இலட்சியம் வெற்றி பெறுவதற்கான அறிகுறிகள் இன்று தோன்றிவருகிறது. அந்த லட்சியம் நிறைவேற—நமது கொள்கைகள் வெற்றிபெற எந்தவித இன்னல்களையும் ஏற்கத் தயாராக இருக்கவேண்டும் அதற்கு நம்மைத் தயார்செய்துகொள்ள வேண்டும்.

இன்று இங்கு நடைபெற்று வரும் செய்கைகளைப் பார்க்கும் போது வெட்கப்படவேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. இந்த நாட்டில் ஒரு சிறு அரசியல் கட்சிகளை நடத்திச் செல்வதற்கான பண்போ, முறையோ தெரியவில்லையே என்று வருந்த

(9ம் பக்கம் பார்க்க)

சென்னைக்கு 3-வது தி. மு. க. மேயர்

***

மாற்றார்கள் பொறாமையும், பொச்சரிப்பும் கொள்ளும் வகையில் சென்னையில் வெற்றி வாகை சூடி, நகர சபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, மக்கள் பணியே மகேசன் பணி என்ற கடமை உணர்ச்சியோடு பாடுபட்டு வந்த நாம் இம்மாத இறுதியில் ஒரு புதிய மேயரை தேர்ந்தெடுக்க இருக்கிறோம் !

சென்னை மாநகரமும், சென்னை மாநகரத்து பெருங்குடி மக்களும் பெரும் களிப்புக் கடலில் மூழ்கித் திளைக்கும் வகையில் நாம் மூன்றாவது மேயரை பதவியில் அமர்த்தி புதிய வரலாறு தீட்ட இருக்கிறோம் !

இதில் யார் போட்டியிட்டாலும்—முதல் மேயர் அரசுவிடம் மூக்குடைபட்டதுபோல்—இரண்டாவது மேயர் அப்துல் காதரிடம் பல்லுடைபட்டதுபோல் மூன்றாவது மேயரிடமும் படுகாயமடைய நேரிடும் !

தயவு செய்து எவரும் தற்கொலைக்குத் துணிய வேண்டாம் !

கேடுகெட்ட ஆட்சியை வெட்டிச்சாய்க்க வீழ்ந்தது எட்டுப் பிணங்கள்!

தண்டலம் நிகழ்ச்சி தர்பார் ஆட்சியை ஒழிக்கட்டும்!

மனிதன் பிறந்தது வாழ - சாக அல்ல! தேர்தல் நெருங்குகிறது; இது நினைவிருக்கட்டும்!

வெள்ளைக்காரனை விரட்டியடித்துவிட்டு கொட்டுமுழக்கோடு பதவி ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் கோமான்கள் ஆட்சியில் கோரச் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக, கொள்ளை கொள்ளையாக நடைபெற்று வரும் நிகழ்ச்சியை நாள் தவருமல், நாமும் கண்டு, கண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிருேம்!

வெள்ளைக்காரன் உருவில் வந்த கொள்ளைக்காரன்போன பின்பு இங்கு நடைபெற்றுள்ள அக்கிரமங்கள் எத்தனை? என்னென்ன?—எண்ணிச் சொல்ல முடியாது!

நாடு வளத்தை இழந்தது—நாட்டு மக்கள் வாழ்வை இழந்தார்கள்! கொலையும், கொள்ளையும் மலிந்தன! பசியும் பட்டினியும் தாண்டவமாடுகிறது! வறுமைக்குப் பயந்து, வாழ்வை மடித்துக் கொண்டவர்கள், உயிரைப் போக்கிக் கொண்டவர்கள் ஏராளம், மிக ஏராளம்!

1947ம் ஆண்டில் தொடங்கிய இந்தக் கொடுமை, ஆண்டுகள் பதின் மூன்று ஆகியும் ஒழியவில்லை! நேற்றுவரைகூட நடைபெற்றிருக்கிறது! நாளையும், அதற்கு மறுநாளும்கூட நடைபெறத்தான் போகின்றன!

நேற்றையத் தினம் தண்டலத்திலே எட்டுத் தங்கக் கட்டிகள் தாங்காத பசியால், தாளமுடியாத வறுமையால், தங்கள் பொன்ஞன உயிரை பொசுக்கிக் கொண்டன!

"அப்பா, அப்பா" என்று கூப்பிட்டு மகிழ்ந்த ஆறு குழந்தைகளை, "அம்மா, அம்மா" என்று அன்பு முகம் காட்டி, அணைத்து, சிரித்து கொஞ்சி மகிழ்ந்திட்ட அந்த ஆறு இளம் பிஞ்சுகளைப் பாழும் கிணற்றிலே தள்ளிஞர்களாம்! அந்தப் பிஞ்சுகளைப் பெற்றெடுத்த பெருமைக்குரியபெற்றவர்களும் அதிலே வீழ்ந்தார்களாம்! உயிரை மாய்த்துக்கொண்டார்களாம்!

வீழ்ந்தவன்சோம்பேறி அல்ல. சோதா அல்ல—மாதந்தோறும் 180 ரூபாய் சம்பளம் பெற்று வந்தவன்தான்! அவனுக்குக் கிடைத்துவந்த அந்த ஊதியம் அவன் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை!

மனைவி இருக்கிருள்—அந்த ஊதியத்தால் அவள் மானம் காக்கப்படமுடியவில்லை!

மகள் மணிமேகலை இருக்கிருள்—அந்தப் பெண்ணரசியை பேணி வளர்க்க முடியவில்லை!

கலைச் செல்வி, பூங்கோதை, புகழேந்தி, மஞ்சுளா, மலர் இவர்களின் வாட்டத்தைப் போக்க அவனுல் முடியவில்லை!

மானத்தோடு வாழ்பவன் தமிழன்—இந்த மானங்கெட்ட ஆட்சியில் அது முடியவில்லை! மாண்டான், மனைவி மக்களோடு மாண்டான்!

நல்ல இதயம் படைத்தவர்கள் ஏங்கி ஏங்கித் தவிக்கிருர்கள்—மனிதாபிமானம் கொண்டவர்கள் மனமுடைந்து சாகிருர்கள். இந்தக் கொடுமையை நினைத்து, நினைத்து கண்ணீர் வடித்துக் கதறுகிருர்கள்!

"காலம் முடிந்து விட்டது—காலன் வந்தான்—அவன் கதையும் முடிந்தது என்று எவரும் நினைக்கவில்லை, நினைக்கமாட்டார்கள்! "காங்கிரஸ் என்னும் காலன் காமராஜர் உருவில் வந்து அவன் கதையை முடித்துவிட்டது" என்று தான் பலரும் எண்ணுவார்கள்!

"நேற்று தண்டலத்திலே ஒரு குடும்பம் ஆட்சி என்னும் கொடும்புலிக்கு இரையாகி விட்டது! நாளைக்கு எந்த ஊரோ, எந்த குடும்பமோ அந்த வேங்கையின் பசியைத் தீர்ப்பதற்கு? யார் அறிவார்கள்?" என்று எண்ணி மக்கள் ஏககமுற்றிருக்கிருர்கள்!

ரத்த வெறி பிடித்த வேங்கை பச்சை மாமிசத்திற்காக நாடெங்கும் சுற்றிச் சுற்றி அலைகிறது! காட்டு மிருகங்களைப் போல் நாட்டு மக்களை அடித்துக் கொல்ல அதைத் தின்று ருசி பார்க்க ஊர் ஊராகத் தெருத் தெருவாக சுற்றித் திரிந்து வருகிறது!

வேங்கையின் கொட்டம் அடக்கப்பட வேண்டாமா? மனித வேட்டை நிறுத்தப்பட வேண்டாமா? பண்புள்ளவர்களே! அன்புள்ளவர்களே! அறநெறி தெரிந்தவர்களே! ஆறறிவு படைத்த மனிதர்களே! சொல்லுங்கள்!

எத்தனைக் காலத்திற்குப் பிணங்கள் வீழ்ந்துகொண்டே இருக்கவேண்டும்?

எத்தனைக் காலத்திற்கு பஞ்சையால், பராரியாய் திரிந்து பாழும் உயிரை மாய்த்துக் கொள்ளவேண்டும்?

தண்டலத்தில் வீழ்ந்த அந்த எட்டுப் பிணங்களோடு அந்த சோகக் கதை முடியட்டும்! இனி தொடரவேண்டாம்!

மனிதன் பிறந்தது வாழ—சாக அல்ல!

மனிதன் பிறந்தது இன்பத்தை அனுபவிக்க—கொடுமையில் உழல அல்ல!

மனிதன் பிறந்தது உண்ண, உறங்க, பெண்டு பிள்ளைகளோடு வாழ—பக்கிரியைப் போல, பண்டாரங்களைப்போல் சத்திரத்தில் சாப்பிட்டு, மடத்தில் உறங்க அல்ல!

மனிதன் பிறந்தது மனிதாபிமானம் பெற, மானத்தோடு வாழ, நேர்மையைகடைபிடிக்க, அறவழி நடக்க, பாசம் கொள்ள நேசம் பெற—மிருகங்களைப் போல் வாழ அல்ல!

மனிதன் பிறந்தது நாட்டுப் பற்ருேடு வாழ, மொழிப்பற்றும் கொள்ள—அடிமையாய் வாழ அல்ல!

பெருமைக்குரிய பெரியவர்களே! நாம் வாழவேண்டுமானுல் இந்த கொடுங்கோலாட்சி ஒழியவேண்டும்! இந்தக் கொடுங்கோலாட்சியை ஒழிக்க வேண்டுமானுல் 1962 வருகிறது—நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

கேடுகெட்ட ஆட்சியை வெட்டிச் சாய்க்க வீழ்ந்த இந்த எட்டுப் பிணங்களும் பயன்பட்டு தண்டலம் நிகழ்ச்சி இந்த தர்பார் ஆட்சியை ஒழிக்கட்டும்!

மறைவு

"தி. மு. க. உறுப்பினரும், செக்காபட்டி அண்ணு மன்ற உறுப்பினருமானதோழர் **க. ஆதிமூலம்** சென்ற 6—10—60 அன்று இயற்கை எய்திஞர். அன்னரைப் பிரிந்துவாடும் அவர்தம் குடும்பத்தார்க்கும், உறவினர்கட்கும் அண்ணு மன்றத்தின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்" என மன்றச்செயலாளர் அறிவிக்கிருர்.



23

சமூக சேவகி சாந்தா தேவியின் அறை மின்சார விளக்குகளின் ஒளியால் ஜ்வலித்துக் கொண்டிருந்தது!

பச்சை நிற விளக்குகள் "வெல்கம்" என்று உருமாறி அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தன!

சாந்தா தேவியும் வாசற்படியில் நின்றுகொண்டு அமெரிக்க நாட்டு சீமான்களையும், சீமாட்டிகளையும் வரவேற்றுக்கொண்டிருந்தாள்!

"ஹலோ! மோசஸ், கமான், கமான்!"

"ஹலோ! இர்வின் ஹவ்வார் யூ!" என்று சாந்தா தேவி வந்தவர்களையெல்லாம் வரவேற்றுக்கொண்டிருந்தாள்.

"மணி பத்தாகி விட்டது, வரவேண்டியவர்களெல்லாம் வந்து விட்டார்கள்! டின்னரை ஆரம்பிக்க வேண்டியதுதான்!" என்று சாந்தா தேவி மனதிற்குள்ளேயே எண்ணிக்கொண்டு ஒரு சோபாவில் வந்து அமர்ந்தாள்!

வகை வகையான மாமிச உணவுகளை எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்!

வெள்ளை நிற கால் சட்டையும், சிவப்பு நிற மேல் சட்டையும், பச்சை நிற தலைப்பாகையும் அணிந்திருந்த வேலையாட்கள் மதுபானங்களை கண்ணாடி டம்ளரில் ஊற்றியபடியே இருந்தார்கள்!

மலைபோல் குவிந்திருந்த ஒயினும், விஸ்கியும், பிராந்தியும், ஒரு வினாடியில் கரைந்து விட்டன!

ஒவ்வொருவரும் தாங்காத போதையால் தலை சுற்றிக்கொண்டிருந்தார்கள்! சாந்தா தேவியும் அளவுக்குமேல் குடித்து நிதானத்தை இழந்து உளறிக் கொண்டிருந்தாள்!

எல்லோரும் எழுந்து நின்றார்கள்! ஜோடி ஜோடியாக கையைக் கோர்த்துக்கொண்டு இடுப்பை வளைத்து, மார்போடு மார்பை அணைத்து பின்னணி இசையோடு இழைந்து ஆட ஆரம்பித்தார்கள்!

அமெரிக்க நாட்டுச்சீமான்கள் நிமிடத்திற்கு ஒருவராக வந்து சாந்தாதேவியின் கரங்களைப் பிடித்து ஆலிங்கனம் செய்து ஆட ஆரம்பித்தார்கள்!

பின்னால் இரண்டே இரண்டு பேர்கள் மட்டும் இந்த 'பால் டான்'சில் கலந்துகொள்ளாமல் உட்கார்ந்திருந்தார்கள்! அவர்களைப் பார்த்து அங்கிருந்தவர்கள் கேலிச் சிரிப்பை உதிர்த்துக் கொண்டே இருந்தார்கள்! "இந்தப் பட்டிக்காடுகள் இங்கு ஏன் வரவேண்டும்!" என்று சிலர் எண்ணி இருக்கக்கூடும்! "இந்த அநாகரீகங்களுக்கு இங்கென்ன வேலை?" என்று பல நாகரீகச் சீமான்கள் நினைத்திருக்கக் கூடும்!

சமூக சேவகி சாந்தாதேவி ஆடிக்கொண்டே பின்னால் உட்கார்ந்திருந்த அந்த அநாகரீக மனிதரின் கையைப் பிடித்து டான்சுக்கு அழைத்தாள்! அவனுடைய மனைவி சாந்தா தேவியின் கன்னத்தில் ஓங்கி பளார் என்று ஒரு அறை கொடுத்தாள்! சாந்தா தேவியின் மூளை கலங்கி விட்டது! போதையும் கொஞ்சம் தணிய ஆரம்பித்தது! மெல்ல நிதானத்திற்கு வந்தாள்.

"சுந்தரி! நீயா?" என்று உரக்கக் கத்தினாள் சாந்தா தேவி!

"ஆமாம், நான்தான்!" என்றாள் சுந்தரி!

"என்ன காரியம் செய்தாய்?" சாந்தாதேவியின் முகம் கடுகடுத்தது.

"நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாயோ அதே காரியத்தைத்தான் நானும் செய்தேன்" சுந்தரியும் பொறுமையை இழந்தாள்!

"நான் என்ன தவறான காரியத்தை செய்துவிட்டேன்?" சாந்தாதேவிக்கு இன்னும் ஆத்திரம் அடங்கவில்லை!

"பண்பு கெட்டவளே! மாற்றான் கணவனை கைபிடித்து இழுத்து டான்ஸ் ஆடுவதுதான் உன் சமூக சேவையா? இதுதான் தமிழச்சியின் பண்பா?" என்று அனல் கக்கக் கூறினாள்!

திரும்பினாள், பக்கத்தில் உட்கார்ந்திருப்பது ராஜன் என்பதை அறிந்தாள். "நீங்களா?" என்று திகைத்தாள்!

"ஆமாம்! நான்தான்" என்று அவனும் தன் ஆத்திரம் தீர ஒரு அறை அறைந்தான்! சாந்தாதேவி அப்படியேசுருண்டு விழுந்துவிட்டாள்.

விருந்துக்கு வந்திருந்த சீமான்கள் எல்லோரும் ஓட்டம் பிடித்தார்கள்!

சாந்தாதேவி படுத்தபடியே நிதானமில்லாமல் கிடந்தாள்!

ராஜனுடைய உள்ளம் கொஞ்சம் இளக ஆரம்பித்தது! அவள் அருகே ராஜன் சென்றான்! சுந்தரியோ அவனைப் பார்த்து ஒரு முறைப்பு முறைத்து முகத்தைச் சுளித்துக் கொண்டாள்! அவன் அப்படியே நடுங்கி, ஒடுங்கி திரும்பி வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான்!

என்ன இருந்தாலும் பெண் அல்லவா! "அத்தான்! போங்கள். பெண் பாவம் பொல்லாது" என்று சுந்தரி அவனுக்கு விடை கொடுத்தாள்!

ராஜன் சாந்தாவின் முகத்தில் கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து— "சாந்தா. சாந்தா! கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரேன்" என்றான்!

"அத்தான்! என்ன பேச்சு அவளோடு! சாந்தவாமே சாந்தா—கண்ணைத் திறந்து பார்க்கணுமாமே இந்த மன்மத ராஜாவை" என்று அவள் அதட்டினாள்!

"சுந்தரி! என்ன இது!" ராஜன் கொஞ்சம் ஆத்திரத்தோடே கேட்டான்!

"இல்லையத்தான், இல்லை! தப்புதான்! அவளை எழுப்புங்கள் என்றாள் சுந்தரி!

"சாந்தா! சாந்தா! எழுந்திரு சாந்தா" என்று அவளை எழுப்ப ஆரம்பித்தான்! அவள் எழுந்திருக்கவே இல்லை!

ராஜன் அவளுடைய கையைப் பிடித்து உட்கார வைக்க முயன்றான்! "ச்சீ! வெட்கமாக இல்லை! ஒரு பெண்ணின் கையைத் தொட்டுத் தூக்க" என்று சுந்தரி நாய்போல் விழுந்து குலைத்தாள்!

'சுந்தரி! எப்படியாவது போ" என்று கூறிவிட்டு அவன் எழுந்து நடக்க ஆரம்பித்தான்! அவள—"போகாதங்க அத்தான் பெண்பாவம் பொல்லாது" என்று தடுத்தாள்!

"சுந்தரி! இவளுக்கு மூளை கலங்கி விட்டது! அவ்வளவு சீக்கிரத்தில் நிதானம் வராது! இவளை நம்ம ரூமிலே கொண்டு போய்தான் வைத்தியம் செய்ய வேண்டும்" என்று கூறினான்! அவளும் அதற்கு ஒத்துக் கொண்டாள்!

சாந்தா தேவியை இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் தங்கள் ரூமில் படுக்க வைத்தார்கள்!

"சுந்தரி! பாரேன்—இந்த ஊசி போட்டு பத்து நிமிடத்திற்கெல்லாம் நிதானம் வந்து விடும்" என்று கூறி ஒரு ஊசியைப் போட்டான்! பத்து, பதினைந்து, இருபது நிமிடங்கள் கூட ஆகி விட்டது! அவளுக்கு நிதானம் வரவே இல்லை!

"சுந்தரி! அவள் உடலுக்கு அந்த ஊசி ஏற்றதல்ல! இந்த ஊசியைப் போட்டால் நிதானம் வந்துவிடும்" என்றான் ராஜன்

"ஓகோ! ஐயாவுக்கு, அவளுடைய உடலைப்பற்றிக் கூடத் தெரியுமா?" என்று கிண்டல் செய்தாள்!

"டாக்டர் என்றால் எல்லோருடைய உடலைப்பற்றியும்தான் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றான் அவன்!

"சரி, சரி! எது, எது, எப்படி

எப்படி இருக்குன்னு தெரிஞ்சிக்கிங்க!" என்றாள் சுந்தரி!

"என்ன, கிண்டலா செய்கிறாய்!" என்றான் அவன்!

"கிண்டலா! டாக்டர்களுக்கு அதெல்லாம் நல்லா தெரிஞ்சாதான் நல்ல மருந்துகளை கொடுக்க முடியும் என்றேன்!" சுந்தரியின் வார்த்தையில் பொருளுக்கு பஞ்சமேற்படுமா ?

"அப்படியா!" என்று கையாண்டி செய்துகொண்டே சாந்தாதேவிக்கு மறுபடியும் ஒரு ஊசி போட ஆரம்பித்தான்!

இந்த ஊசிக்கும் அவள் மசியவில்லை!" அவளுக்கு உண்மையிலேயே மயக்கம்தானா? அல்லது பாசாங்கு செய்கிறாளா" என்று அவன் சந்தேகப்பட ஆரம்பித்தான்!

"அவன் சந்தேகப்படுவதில் எதுவும் தவறில்லை" என்பதை அவள் உதடுகளில் மெல்ல மெல்ல அரும்பிக் கொண்டிருந்த புன்னகை ரேகை லேசாக தெரிவித்துக் கொண்டிருந்தது! இதை அவனும் எப்படியோ தெரிந்து கொண்டுவிட்டான்!

"சுந்தரி! இந்த வியாதிக்கு என்னிடம் மருந்தேகிடையாது" என்றான் ராஜன்!

"அப்படின்னா என்னவது அத்தான்!" அவளுக்குக் கொஞ்சம் திகில் ஏற்படத்தானே செய்யும்!

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும்!" ராஜன் கையை விரித்தான்!

"என்னசெய்வதா? இதற்குத்தானா நீங்கள் டாக்டருக்கு படித்தீர்கள்" என்று அவள் உண்மையிலேயே கேலி செய்ய ஆரம்பித்தாள்!

"அந்த மருந்து என்னிடம் இருந்தால்தானே வைத்தியம் செய்ய முடியும்" என்றான் அவன்!

"உங்களிட மில்லா விட்டால் உலகத்திலேயே இல்லையா?" என்றாள் அவள்!

"ஏனில்லை! பணமிருந்தால் இந்த நாட்டில் மருந்தா கிடைக்காது?" ராஜன், தன்னுடைய மணிபர்சஸ் காலி என்பதை சொல்லாமல் சொல்லி வைத்தான்!

"எவ்வளவு ரூபாய் வேண்டும்? நான் தருகிறேன்" என்றாள் அந்த சீமாட்டி!

"அப்படியா! அப்படி என்றால் இந்த மருந்தை வாங்கிக்கொண்டு வாம்மா" என்று கொஞ்சம் கேலியோடு ஒரு துண்டு சீட்டைக் கொடுத்தான்!

சுந்தரியும் அந்த சீட்டை வாங்கிக் கொண்டு மருந்து வாங்க டாக்சி காரில் புறப்பட்டாள!

"சுந்தரி வெளியில் புறப்பட்டவுடனேயே சாந்தாவுக்கு நிதானம் வந்துவிட்டது! கண்ணைத் திறந்து பார்த்து, உதட்டிலே ஒரு புன்சிரிப்பை சிந்தினாள்!

"சாந்தா! மயக்க மெல்லாம் தெளிந்து விட்டதா?" ராஜன் மிக்க பரிவோடு தான் கேட்டான்!

"இல்லை, டாக்டர் சார்! தலை பம்பரம்போல் சுற்றுகிறது சார்! நெஞ்செல்லாம் ஒரே வலி சார்! மார்பிலே ஒரே கனம் சார்! உடம்பெல்லாம் ஒரே கொதிப்பு சார்! கொஞ்சம் தொட்டுதான் பாருங்களேன்" என்று ராஜனுடைய கரங்களை எடுத்து மார்பிலே தொடப் போனாள்! ராஜனோ—"ச்சீ வெட்கமில்லை" என்று கையை உதறிக் கொண்டான்!

"டாக்டர் சார்! வியாதி உள்ள பெண்களை டாக்டர்கள் தொட்டுப் பார்ப்பதில்லையா?" என்று மிக ஒய்யாரமாகக் கேட்டாள்!

"அதற்கு இந்த டாக்டர் தகுதியற்றவன்" ராஜன் முகத்தில் கொஞ்சம் கடுகடுப்பு தென்படத்தான் செய்தது!

"ஏன்! அதற்கேற்ற திறமையில்லையா?" அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்!

"ஆமாம், ஆமாம்! உன் வியாதியைத் தீர்க்கும் திறமை இந்த டாக்டருக்கு நிச்சயமாகக் கிடையாது! "ராஜன் எதையோ நினைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்!

"நானும் ஒரு டாக்டர்தான்! தெரியுமா டாக்டர் சார்!" என்றான் அவன்!

"அப்படியானால் நீயே உன் வியாதியைத் தீர்த்துக் கொள்ளலாமே!" என்றான் அவன்!

"அதெப்படி சார் முடியும்! என் வியாதியை நீங்கள்தான் தீர்க்க முடியும்—உங்கள் வியாதியை நான்தான் தீர்க்கமுடியும்" என்றாள் அவள்!

"எனக்கு ஒன்றும் உன்னைப் போல்வியாதியில்லை, தெரியுமா?" என்றான் அவன்!

"எங்கே, உங்கள் ஸ்டெதஸ்ஹோப்பை கொஞ்சம் கொடுங்கள்! வியாதி இருக்கிறதா. இல்லையா என்பதைப் பார்த்துச் சொல்லுகிறேன்" என்றாள் அவள்!

"என் உடம்பைப்பற்றி கவலிக்க எனக்கு வேறு ஒரு டாக்டர் இருக்கிறார்! நீ கவலைப்பட வேண்டாம்!" என்று மிக்க ஆத்திரத்தோடு கூறினான்!

"ஏன்? நான் உங்கள் உடம்பைப்பற்றி கவலைப்படக் கூடாதா? அந்த உரிமை எனக்குக் கிடையாதா?" என்றாள் சாந்தாதேவி!

"அந்த உரிமையெல்லாம் சென்னை மருத்துவக் கல்லூரியோடே போய்விட்டது!" என்றான் அவன்!

"இல்லை, ராஜா போகவில்லை! அந்த உரிமை எப்போதுமே போகாது!" என்று கூறியபடியே ராஜனுடைய கரங்களை அவள் பிடித்துக் கொண்டாள்! அவன் திமிறினான்! என்றாலும் அவள் விடவில்லை!

"நாடகமா ஆடுகிறீர்கள்! எத்தனை நாளாக இந்த வெட்கம் கெட்ட வேலை நடக்கிறது" என்று அதட்டிக் கொண்டே சுந்தரி உள்ளே நுழைந்தாள்!

"இல்லை, சுந்தரி அவள்... அவள்...அவள்..."

"என்ன உளறுகிறீர்கள்! பூனையைப்போல் பாசாங்கு செய்த ஆளு புலியைப் போல் பாய்வார் என்று நான் நினைக்கவே இல்லையே!" என்று உரக்கக் கத்தினாள்!

"ஐயோ! சத்தம் போடாதே அம்மா! நாலு பேர் பார்த்தா சிரிப்பாங்க" என்று நடுங்கியபடியே கெஞ்சினான்!

"சிரிக்கட்டுமே! நாலு பேர் சிரிச்சாதான் உங்களுக்குப் புத்தி வரும்" என்றாள் அவள்!

அவன் வாய் மூடி மௌனியாகி கட்டிலில் போய் சாய்ந்தான்! சாந்தாதேவியும் அந்த இடத்தை விட்டு மெல்ல நழுவினாள்!

(தொடரும்)

விற்பனையாளர்கட்கு
முக்கிய அறிவிப்பு

★★★

இந்த இதழோடு பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. பட்டியல் கிடைத்த மூன்று தினங்களுக்குள் பட்டியல் தொகையை அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறினால் அடுத்த இதழ் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

தங்களுக்குத் தேவையான இதழ்களுக்குரிய முன்பணமனுப்புபவர்களுக்கே பிரதிகள் அனுப்பப்படும்.

— நிர்வாகி,

"மாலை மணி"

(12ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வது 5 கோடிகளை வைத்துத்தான்—அதை நம்பித்தான் காங்கிரஸ் இருக்கிறது. அதை வைத்துத்தான் காமராசர் கேட்கிறார். "இவர்களால் என்ன செய்ய முடியுமென்று"

நமக்கு ஏது கோடி? அந்தப் பெயரே நமக்குத் தெரியாதே!

நமக்குத் தெரிவதெல்லாம் ஊர்க்கோடி, தெருககோடி தானே? நமது நண்பர் சிற்றரசு கூறுவது போன்று செத்தவர்களுக்கு போடும் கோடிதானே தெரியும்!

பணத்தால்—பதவியால், அதிகாரத்தால் வெற்றி பெற்றுவிட முடியுமென காங்கிரஸ் எண்ணுகிறது. அமைச்சர்கள் எண்ணுகிறார்கள், இதை வைத்துக் அவர்கள் வெற்றி பெற்று விட்டால், வெற்றி பெறட்டுமே. அதனால் நமக்கு வெட்கம் ஏற்பட்டு விடாது. இந்த நாட்டில் தேர்தலில் ஜனநாயகத்தை—நாகரீகத்தைக் கொலை செய்வதை மற்ற நாட்டார் தெரிந்து கொள்ளட்டும்.

மக்களின் ஆதரவு, அவர்கள் உணர்ச்சி அவர்களுக்கு இருக்கும் வலிவு இவைகளையெல்லாம் பணத்தால் அடித்து வெற்றி பெற காமராசர் நினைக்கிறார். இதை முறியடிப்பது உங்களது சக்தியால்தான். நீங்களெல்லாம் பணத்தைக் கொண்டு எதையும் சாதித்து விடலாம் என்ற ஆணவக்காரர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டும்.

ஆகவே இதுவரை கொடுத்து வந்ததை இனி வருங்காலத்தில் உங்களது முழு ஆதரவையும் ஒத்துழைப்டையும் கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், எனக்கு இந்த வாய்ப்பு நல்கியதற்கு நன்றி செலுத்தி பெரும் மழை வருவதற்குமுன் வீடுபோய்ச் சேரும்படி கேட்டு முடிக்கிறேன்.

★

கழகம் எதையும் ஆராய்ந்த பின்பே முடிவெடுக்கும் !

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியவர் கூற ஆரம்பித்ததும், அமைச்சர் முகம் மாறுகிறது. பக்கத்திலிருக்கும் காங்கிரஸ் காரரைப் பார்க்கிறார்.

"என்ன இந்த கிராமத்திலும் கழகம் இருக்கிறதா' என்று மெதுவாகக் கேட்க ஆரம்பிக்கிறார். உடனே "இல்லை. ஒன்றிரண்டுபேர்கள்" என்று இழுக்க ஆரம்பிக்கிறார். அமைச்சர் எதிரில் இருக்கும் மரங்களில் பறக்கும் கருப்பு, சிகப்பு நிற கொடியைப் பார்க்கிறார் விஷயம் புரிந்து கொள்கிறார். உடனே குறைகளைச் சொன்ன பெரியவரிடம், "ஆகட்டும் பார்ப்போம்" என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறார். இந்த நிலைதான் இன்று எங்கும் நிலவிவருகிறது. நான் சென்று வந்த கிராமங்களில் எல்லாம் இதைத்தான் கேள்விப்படுகிறேன். கிராமத்துப் பெரியவர்களும் கூறுகிறார்கள்.

எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது. அமைச்சர் காமராசர் கிராமங்களில் "என்ன தேவை" என்று கேட்பதை பார்க்கும்போது அது நினைவுக்கு வருகிறது.

கல்யாண வீடுகளில் பந்தி உபசரிப்பு நடைபெறும். சாப்பாடு நடந்து கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து ஒவ்வொருவரையும் பார்த்து "என்ன வேண்டும், என்ன வேண்டும்" என்று கேட்டுக் கொண்டே போவார், பந்தியிலே சாப்பிடுகிறவர்கள் மரியாதைக்காக ஒன்றும் தேவையில்லை" என்று கூறிவிடுவார்கள். அப்படிக் கூறுவார்கள் என்று நினைத்துத் தான் காமராசர் கிராம மக்களிடம் போய் என்ன வேண்டுமென்று கேட்கிறார்.

கிராமத்து மக்களுக்கு, அங்குள்ள பெரியவர்களுக்கு நமமால் எந்தக் குறைகளையும் நீக்க முடியாது. நாம் ஆட்சியில் இல்லை என்பதை நன்கு அறிவார்கள். இருந்தாலும் என் நம்மை அன்புடனும், பாசத்துடனும் வரவேற்கிறார்கள். நமது இலட்சியத்திலுள்ள நேர்மை, நாம் கூறுகின்ற பேச்சுக்களில் உள்ள உண்மைகள் நாம் கூறும் கருத்துக்களில் அவர்கள்கொண்டுள்ள நம்பிக்கைகள். இதை வைத்தேதான் மக்கள் நம்மையும், நமது கழகத்தையும் பின்பற்றுகிறார்கள்.

நான் உங்களிடம் இன்னுமொரு விஷயத்தைக் கூறவிரும்புகிறேன், நேற்று முன்தினம் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த அறந்தாங்கிப் பக்கத்திலுள்ள கோட்டைப் பட்டணம் என்ற ஊரில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூற ஆசைப்படுகிறேன்.

அந்த கிராமம் கடலோரத்தில் இருக்கிறது. அதற்குக் கோட்டைப்பட்டணம் என்று பெயர். அந்த கிராமத்திலிருந்து சிலோன் 16 கல் தொலைவுதான் இருக்கிறது. அந்த ஊரில் எனக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுத்தார்கள். அதில் பல குறைபாடுகளைக் கூறி அதை நீக்க வேண்டுமென்று என்னைக் கேட்டிருந்ததுடன், மின்சார அமைச்சர் ராமையா அவர்கள் அந்த நகருக்கு வந்திருந்ததாகவும் அவரிடம் இந்த ஊருக்கு மின்சார வசதி செய்ய வேண்டுமென்று கேட்டதாகவும், அவர் இதுவரை ஒன்றும் செய்யவில்லை என்றும் "நீங்களாவது அதற்கு வழி செய்யுங்கள்" என்று எழுதி இருந்தார்கள். மந்திரிகள் செய்யாத ஒன்றை நான் எப்படி செய்ய முடியும்? "அமைச்சரே செய்யவில்லை, நீங்களாவது செய்யுங்கள்" இந்த வாசகத்தைப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது.

நான் எதிர்கட்சியிலிருப்பவன் ஆட்சிப் பொறுப்பு அவர்களிடமிருக்கிறது. நான் உடனே அவர்களிடம் கூறினேன்.

"எனக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கும் வாய்ப்புகள் இல்லை, அதை அமைச்சர்கள்தான் செய்யவேண்டும்.

நான் ஆட்சியில் ஏற்படும் குறைபாடுகளையும். அவர்கள் செலவு செய்யும் கணக்குகளைப் பார்த்து கொள்ளை போனது எவ்வளவு, ஊதாரித்தனமாக செலவு செய்தது எவ்வளவு என்பது போன்றவைகளைத்தான் கூறமுடியும்" என்று கூறினேன்.

நாட்டு மக்கள்—அதுவும் கிராமத்திலுள்ளவர்கள் நம்மிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள். நம்மிடம் எவ்வளவு காரியத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எந்த கிராமத்திற்குச் சென்றாலும், போவதற்கு வசதியற்ற நுழைய முடியாத பட்டி தொட்டிகளில் எல்லாம் நம்முடைய கருத்துக்கள் — கொள்கைகள் இலட்சிய முழக்கங்கள் நுழைந்திருக்கிறது. எங்கும் நமது கொடிகள் கெம்பீரமாகப் பறக்கிறது.

நான் இரண்டு மூன்று தினங்களுக்கு முன் நண்பர் கருணாநிதியின் தொகுதியாகிய குளித்தலைக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அந்த கிராமத்திற்குப் "பஞ்சப்பட்டி" என்று பெயர். அங்கு அரசியலுக்கும் பஞ்சம் இருக்குமென்று நினைத்தேன்.

என்னை மாலை 6 மணிக்கு அந்த கிராமத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு என்னை வரவேற்றவர்கள் 10, 15, 20 வயது சிறுவர்கள். அவர்கள் பல முழக்கங்களை முழங்கிக் கொண்டு சென்றார்கள். முதலில் 'இந்தி ஒழிக' என்று முழக்கமிட்டார்கள். இது நமது கழகத்தின் கொள்கைகளில் ஒன்றுதானே, அதை உணர்ந்து அவ்விதம் சொல்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

இரண்டாவதாக, "லம்பாடி இந்தி ஒழிக" என்று கூறினார்கள். வட நாட்டுக்காரர்கள் பேசுகின்ற மொழியாக இருப்பதால், அவர்கள் தொடர்புடையதாக இருப்பதால் அவ்விதம் முழக்கமிடுகிறார்கள் என்று எண்ணினேன்.

மூன்றாவதாக நகரங்களில் உள்ளவர்கள் கூட அறியாத—சொல்லாத ஒரு அடைமொழியைச் சேர்த்து அதாவது, "எட்டுமந்திரிகளுக்குத் தெரியாத இந்தி ஒழிக" என்று முழக்கியவுடன் எனக்கு மிகவும் ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் தந்து விட்டது.

நகரத்தில் உள்ளவர்கள் பலருக்கு எத்தனை மந்திரிகள் இருக்கிறார்கள் என்று தெரியாதிருக்கும்போது கிராமத்திலுள்ள சின்னஞ் சிறுவர்கள் நம்மை ஆள்பவர்கள் எத்தனை அமைச்சர்கள் என்று தெரிந்திருக்கிறார்கள். இந்த நிலை எப்படி உண்டாகியது. இது நமது கழகம் செய்த பணியால்தான். நம்முடைய பிரச்சார பலத்தால்தான் இதை ஏன் கூறுகிறேன் என்றால் எவ்வளவு கலகமும், காலித்தனங்கள் செய்தாலும் நமது கொள்கைகள் — நாம், வளர்கிறோமே ஒழிய, அழியவில்லை என்பதற்காகவே இதைக் கூறுகிறேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

(தலையங்கம் தொடர்ச்சி)

தின் சேவை" என்று பெருமையோடு பேசி வரும் கவிஞர் கண்ணதாசன் இருக்கிறார்-அவரிடம் ஒரு ஐந்தாயிரத்தை வாங்குங்கள்! அத்தோடு ஒரு கதையையும் எழுதிக் கேளுங்கள், அதிலே அவரையும் நடிக்கச் சொல்லுங்கள்.

அதேபோல் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், அதேபோல் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, அதேபோல் மற்ற மற்றவர்களிடம்பெரும் உதவியைப் பெறுங்கள் !

நாடகம் நடத்தியோ, சினிமா படம் எடுத்தோ, சிறப்புக் கூட்டங்கள் நடத்தியோ இந்தத் தொகையை கலையுலகம் தரவேண்டும் !

இந்தத் தேர்தலுக்கு இந்த ஐந்து இலட்சம் மட்டும் போதாது! ஏறத்தாழ ஒரு இருபது லட்சமாவது தேவைப்படும்! மீதித்தொகையை நமது பொருள் சேர்ப்பாளர் கலைஞர் கருணாநிதி திரட்டித்தந்துவிடுவார் அந்தத் திறமை, அந்த ஆற்றல், அந்த உணர்ச்சி அவருக்கு நிச்சயமாக உண்டு!

நாம் எத்தனை இலட்சத்தை சேர்க்கிறோமோ அதற்கேற்ற பயனை சட்டாயம் பெறுவோம் !

இந்தத் தேர்தலில் நாம் வெற்றி பெறவில்லை என்றால் ஒரு நீண்ட காலத்திற்கு இந்த நாட்டிற்கு வாழ்வு கிடைக்காது, ஒரு நீண்ட காலத்திற்கு வளம் கிடைக்காது!

எனவே நாம் எப்படியும் காங்கிரசை தோற்கடித்தாக வேண்டும்! கொஞ்ச காலத்திற்கு சொந்த சுகத்தை மறந்து நாம் தேர்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவோமானால் நாம் நீண்ட, நீடித்த சுகத்தை, நிரந்தரமாக அமைக்க முடியும் !

வசனகர்த்தாக்கள் இனி தேர்தல் நிதிக்காக வசனம் எழுதட்டும் !

நடிகர்கள் இனி தேர்தல் நிதிக்காக நடிக்கட்டும் !

கவிஞர்கள் இனி தேர்தல் நிதிக்காக கவிதை புனையட்டும் !

பட முதலாளிகள் இனி தேர்தல் நிதிக்காகப் படம் எடுக்கட்டும் !

இந்த நல்லயோசனையை கலையுலகம் ஏற்க வேண்டும், அதற்கான பணியை நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் இன்று முதலே செய்ய வேண்டும் என்று கூறி—ஐந்தாயிரம் வெண் பொற்காசுகளைத் தந்த அவரது நல்ல இதயத்தைப் பாராட்டி—மேலும், மேலும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிந்து காங்கிரஸ் கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தி, மக்களுக்கு பெருவாழ்வை அளிக்க வேண்டும் என்று எங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்து—அதற்காக நீண்ட நெடுங்காலம் வாழ அவரை வாழ்த்துகிறோம் !

ஐந்து இலட்சம் தரவேண்டும்—மறக்க மாட்டீர்கள் என்றாலும் இறுதியாகவும் நினைவூட்டுகிறோம் !

முன்பு வாலிபர்கள்தான் கழகத்தை ஆதரித்தார்கள்!

இப்பொழுதோ வயதானவர்களும் ஆதரிக்கிறார்கள்!

நமது லட்சியத்திலுள்ள நேர்மையே இதற்குக் காரணம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது.

மாற்றுக் கட்சிக்காரர்களின் கலகத்தையோ, தாக்குதலையோ கண்டு ஆயாசப்பட்டு விடக் கூடாது. அதனால் நாம் அலுப்பு அடைந்துவிடக்கூடாது. "அய்யோ இப்படித் தாக்குகிறார்களே" என்று எண்ணிவிடக் கூடாது. அப்படி எண்ணுவோமானால் நாம் முன்னேற முடியாது. நமது லட்சியமும் வெற்றி அடையாது.

இன்று நடைபெறுகின்ற இந்தச் சிறிய கலவரங்களைக் கண்டே ஒன்றிரண்டு தாக்குதலைக் கண்டே ஆயாசப்பட்டால் இனி நடைபெறப் போகும் — 61க்குப் பின் நடைபெறப்போகும் சம்பவங்களை எப்படித் தாங்கப் போகிறோம்?

நூற்றுக்கணக்கான கலவரங்களும், பல உயிர்ப் பலிகளும், ஏராளமான அடிதடிகளும் தேர்தல் நேரங்களில் சந்திக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் தாங்குகின்ற மன உறுதியையும், கடமை உணர்ச்சியையும் பெற்றே ஆகவேண்டும்.

இன்று நாம், இந்த மாதிரி பலாத்காரச் செயல்களினாலோ, கலவரங்களினாலோ நாட்டு மக்களிடத்தில் செல்வாக்கிழந்து விடவில்லை, வளர்ச்சியடையாது குன்றிவிடவில்லை. நாம் அடைந்துவரும் வளர்ச்சியைக் கண்டுதான் மனக்கிலேசமும், அச்சமும் கொண்டு இந்த முறையைக் கையாளுகிறார்கள். இந்த வழியைப் பின்பற்றுகிறார்கள். இதனால் எல்லாம் நமது வலிவு குறைந்து விடாது.

எதற்கும் நாம் பொறுமையையும் அரசியல் கண்ணியத்தையும் கடைப்பிடித்து வரவேண்டும். யார் பெரிய பலசாலிகள், யார் சின்ன பல சாலிகள் என்று காட்ட முற்படக் கூடாது. அது அரசியல் நாகரீகமாகாது, அரசியல் பண்புமாகாது.

நமது கொள்கைகள் இன்று நாட்டு மக்களிடையே பரவி இருக்கிறதென்றால் நாம் அரசியலில் காட்டிவந்த கண்ணியமும், அரசியல் பண்பும்தான் காரணம்.

நமது இலட்சியம் வெற்றி பெறுவதற்கு நாம் பலி கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும்.

நமது நண்பர் ஆரியசங்காரன் கூறினார். நமது கூட்டங்களுக்குப் போய் வருபவர்களை வழிமறித்து அடிப்பதாகவும், பொய் வழக்குகள் போட்டு, தொல்லைகள் தருவதாகவும், கோவை ஆரோக்கியசாமியை கூட்டத்திற்குப் போய் வந்ததாலோ, அல்லது பெரிய அரசியல் கூட்டங்களில் கலந்து பேசியதாலோ, அல்லது தொழிலாளர்கள் சங்கங்கள் அமைத்து கூட்டங்களிற் பேசும்போதோ அவரைத்தாக்கவில்லை.

அவர் கோவையிலுள்ள கழகப் பணிமனையில் தனியாக உட்கார்ந்து இந்தி எதிர்ப்பு வாக்கியங்களைத் தட்டிகளில் எழுதிக் கொண்டிருந்தார். அவரை வெட்டுவதற்காக அரிவாளோடு நான்கைந்து பேர்கள் கட்டிடத்திற்குள் வந்தார்கள். ஆனால் ஆரோக்கியசாமி தனது உயிரைக் குடிக்க வருகிறார்கள் என்று எண்ணவில்லை. அவர்களை உள்ளன்போடு வரவேற்றார். "வாருங்கள், உட்காருங்கள்" என்று உபசரித்தார்.

அதற்கு அவர்கள் என்ன கூறினார்கள். "யாரையடா உட்காரச் சொல்கிறாய்? உன் உயிர் குடிக்கவல்லவோ வந்திருக்கிறோம் என்று கூறி அரிவாளால் வெட்டினார்கள். அவர் தடுத்துப் பார்த்தார். கைகளிலெல்லாம் காயமேற்பட்டது.

குகைக்குள் சிக்கிய புலியைப் போன்று எதுவும் செய்ய முடியாது தத்தளித்தார். சீறிப்பாய்ந்து காப்பாற்ற முடியாத நிலையில் அந்தச் சிறு இடத்தில் சிக்கித் தவித்தார்.

நாலு பக்கமுள்ள சுவர்களிலெல்லாம் அவரது குருதி படர்ந்தது. வெள்ளைச் சுவர்களெல்லாம் செந்நிறமாகியது.

இதனால் நமது கழகம் அழிந்து விட்டதா? கழகப் பணிகள் தளர்ந்து விட்டதா? இல்லை முன்பைவிட இப்போது அதிகமாக நடக்கிறது.

ஆரோக்கியசாமியை இழந்தோம். இன்று அவரது பணியைச் செய்ய பலர் வந்துவிட்டார்கள். ஆரோக்கியசாமி செய்துவிட்ட பணியை தொடர்ந்து நடத்த பலர் இன்று முனைந்து விட்டார்கள். அவர் உழைத்தார். ரத்தத்தில் மூழ்கினார். அவர் பலியானாலும் அவரது இலட்சியம் நிறைவேற பலர் பணியாற்ற அவரைப் போல் தாங்களும் பலியாகியாவது கொள்கையை வெற்றி பெறச் செய்யவேண்டுமென்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

ஆரோக்கியசாமியின் பலியால் கோவை மாவட்டம் வளர்ந்திருக்கிறது. அழிந்துவிடவில்லை.

இன்று நமது இயக்கத்தில் உள்ள தோழர்கள் அனைவரும் எந்த விலையைக் கொடுத்தேனும் தங்கள் இன்னுயிரைக் கொடுத்தேனும் தங்களது நாட்டை மீட்க வேண்டுமென்ற உறுதிகொண்டு விட்டார்கள். "எதை வேண்டுமானாலும் நாங்கள் செய்யத் தயார்" என்று வாலிபர்கள் எல்லாம் சொல்ல முன் வந்து விட்டார்கள்.

ஒரு விடுதலை இயக்கம் வளர வேண்டுமானால் தியாக உள்ளம் படைத்தவர்கள் பலர் முன் வரவேண்டும்.

வாலிபர்கள், வீரர்கள் அரும்பு மீசைக்காரர்கள் இவர்களெல்லாம் எப்படி தங்கள் இன்னுயிர்களை பலியிட்டு தங்கள் தங்கள் இலட்சியங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்ற வரலாற்றை நாம் கண்டுதான் வந்திருக்கிறோம்.

அந்த மாதிரியான வாய்ப்பு

(10ம் பக்கம் பார்க்க)

விடுதலை! விடுதலை!
பறையருக்கு விடுதலை!
புலையருக்கு விடுதலை!

"இந்த நாட்டில் தீண்டாமை ஒழிந்து விட்டது, எல்லோருக்கும் சம அந்தஸ்து கிடைத்து விட்டது, சம உரிமை வழங்கப்பட்டு விட்டது" என்றெல்லாம் பேசுவது வெறும் கபட நாடகம், ஏமாற்று வித்தை என்று மத்திய சர்க்கார் ரயில்வே மந்திரி திண்டுக்கல்லில் பேசி இருக்கிறார். எல்லோருக்கும் சம அந்தஸ்து என்று அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளது வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்றும் பேசி இருக்கிறார்.

கிராமங்களில் ஒரே கிணற்றில் தாழ்த்தப் பட்டவர்கள் தண்ணீர் எடுக்க முடிகிறதா என்றும் கேட்கிறார்.

ஜாதி யில்லையடி பாப்பா, சமய மில்லையடி பாப்பா என்று பாடும் காந்தி பக்தர்களே. விடுதலை, விடுதலை—பறையருக்கும், புலையருக்கும் விடுதலை என்று பாடுகின்ற கனவான்களே. உங்கள் சுய நலப் போர்வை கிழிக்கப் படுகிறது—அதுவும் உங்கள் அமைச்சர் கனம் ஜகஜீவன் ராம் அவர்களாலேயே! என்ன பதில்? இதற்கு என்ன பதில்?

கிராமத்திலுள்ளவர்களுக்கு அமைச்சர்கள் மீது நம்பிக்கை இல்லை !

அவர்கள் செய்ய வேண்டியதை நான் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள் !

(முன் பக்கத் தொடர்ச்சி)

நமது சழகத்திற்கு வாய்த்திருக்கிறது. அதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும்.

காலிகளாலோ, காங்கிரசுக்காரர்களாலோ நாம் அழிந்துவிடுவோம், நமது கொள்கைகள் மறைந்துவிடும் என்று பயப்பட வேண்டியதில்லை.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த காலத்தில் ஏற்பட்டஎதிர்ப்புகளையும், தொல்லைகளையும், கலகங்களையும், கலவரங்களையும் தாங்கி வந்திருக்கிறோம். அந்த உறுதியிலிருந்து சிறிதும் மாற்றம் அடையவில்லை என்று காங்கிரஸ்காரர்களுக்கு நன்கு தெரியும், காலிகளுக்கும் நன்கு தெரியும். பல இன்னல்களுக்கும்,எதிர்ப்புகளுக்கிடையேதான் சுயமரியாதைக் கொள்கைகள் வளர்ந்தன; அந்தப் பரம்பரையினர்தான் நாம்.

ஆகவே உங்களையெல்லாம் நான் வேண்டிக்கொள்வது, எதிரிகள் தாக்கினால் திருப்பித் தாக்க வேண்டுமென்றோ, அவர்கள் செய்வது போன்று நாமும் பலாத்காரத்தில் இறங்கவேண்டுமென்றோ ஒருநாளும் எண்ணாதீர்கள்.

எண்ணினால் அது நமக்குத்தான் இழுக்கு.

அரசியலில் நாணயத்தையும், கண்ணியத்தையும் கடைப்பிடிப்பதால் தவறு ஒன்றும் ஏற்பட்டுவிடாது.

நான் பொதுமக்களுக்கு ஒன்று நினைவு படுத்த ஆசைப்படுகிறேன். இந்த மாதிரி காரியங்களை வளரவிட்டால் அது பொது மக்களுக்கும் இழிவு ஏற்படும்.

நாம் கூறுகிறோம், கலகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் தான் பலாத்காரச் செயல்களை செய்கிறார்கள் என்றுகூறுகிறோம். காங்கிரஸ்காரர்கள் கழகத்தார்கள்தான் அப்படிச் செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

இந்த நேரத்தில் பொதுமக்கள் நீதிபதிகளாக இருந்து நாட்டில் நல்ல சூழ்நிலை ஏற்பட வழி செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நமது நாட்டில் நடைபெறும் அரசியலைக் கண்டு வெளிநாட்டார்கள் எள்ளி நகையாடுவார்கள். இந்த நாட்டிலுள்ளவர்களுக்கு அரசியலையே நடத்தத் தெரியவில்லை என்று கேலி செய்வார்கள். அரசியலில் நாகரீகத்தைக் கையாளத் தெரியாதவர்கள் என்று கூறி இந்த நாட்டிலுள்ளவர்களையே கேவலமாக நினைப்பார்கள்.

காங்கிரஸ் இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தது. விடுதலை பெறுவதற்காக காங்கிரசார் தடியடிபட்டு சிறை சென்று தியாகங்கள் செய்தார்கள் என்றெல்லாம் வெளிநாட்டார் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் நடைபெறும் அரசியல் கண்ணியத்தைப் பார்க்கும்போது காங்கிரஸ்காரர்களையும் கேவலமாக எண்ணுவார்கள். இவர்களுக்கும் அரசியலை நடத்தத் தெரியவில்லை என்று எண்ணுவதுடன் இங்கு ஜனநாயகத்தையே கொலை செய்கிறார்கள் என்றுதான் நினைப்பார்கள். ஆகவே நாம் அரசியல் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படும் முறைகளைக் கண்டிப்பாகக் கையாளக் கூடாது. அப்படிக் கையாள முனைந்தால் நாம் அழிந்து விடுவோம். இதை நமது தோழர்கள் நன்கு உணர்ந்துக்கொள்ள வேண்டும்.

இந்த நகருக்குப் பக்கத்திலுள்ள பூவிருந்தவல்லியில் ஒரு காங்கிரஸ்காரர் காலிகளையும், ரௌடிகளையும் வைத்து நமது தோழர்களைத் தாக்கி வந்தார். இது தொடர்ந்து நடந்து கொண்டே வந்தது.

நான் இது குறித்து சட்ட சபைக் கூட்டத்திறகுப போகும் போது. அமைச்சா பக்தவத்சலம் அவர்களிடம் கூறி வந்தேன்.

மற்றும் அவரிடம் கூறினேன். "இதை வளரவிட்டால் இது பூந்தமல்லியோடு நிற்காது. எங்கும் சாதிச்சண்டையில் வந்து மூண்டு விடும்" என்றும் எச்சரித்தேன். அதற்கு அவர் கூறினார். "உங்கள் கழகத்தார் தான் காங்கிரஸ்காரர்களைத் தாக்குகிறார்கள்" இதை நீங்கள் தான் அடகக வேண்டுமென்று கூறினார்.

நான் மேலும் அவரிடம் கூறினேன். "இந்த நிலைமிக ஆபத்தானது. அதை கண்டிக்காது விட்டால் போலீஸ்காரர்களை தாக்கும் நிலை வரும் என்றும் கூறினேன்.

அதன்படியே பூவிருந்தவல்லியில் ஒரு போலீஸ் அதிகாரியை கதவுக்குப் பின்புறம் போடப்பட்டிருந்த இரும்புத் தகடை எடுத்துத் தாக்கி இருக்கிறார்கள்.

இதை நான் மீண்டும் மந்திரி பக்தவத்சலத்திற்கு நினைவுபடுத்தியபோது, அவர் ஆங்கிலத்தில் பதில் கூறினார்.

"I am not leaving this matter"

நான் இதைவிடப் போவ

(11ம் பக்கம் பார்க்க)

கேளுங்கள்! கேளுங்கள்! அமைச்சர்களே, கேளுங்கள்! ஜப்பான் நாட்டு சங்கதியை கேளுங்கள்!

ஜப்பான் நாட்டின் சோஷலிஸ்டு சட்சித் தலைவர் படுகொலை செய்யப்பட்டதை தடுக்க முடியாத காரணத்தால் தவற்றை உணர்ந்து, ஆற்றலற்ற தன்மையை உணர்ந்து அந் நாட்டின் பொது பந்தோபஸ்து அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்து ஜனநாயகத்தின் மதிப்பையும், பெருமையையும் காத்திருககிறார்—பதவி பெரிதல்ல, கடமையே பெரிது என்பதை உலகத்திற்கே ஒரு பாடமாக எடுத்துக்காட்டி இருக்கிறார்! இதுதான் மனிதாபிமானம் என்பதை தனது ராஜினாமா மூலம் நல்லுரையும் வழங்கி இருக்கிறார்!

இங்கே? இங்கே? சொன்னால் வெட்சக் கேடு! கொல்லப்பட்ட எதிர்க்கட்சிகாரர்களின் எண்ணிக்கையை சொன்னாலே சோகம்தான் பிறக்கும், நினைத்தாலே நெஞ்சம் தான் வெடிக்கும்!

தூத்துக்குடி கே. வி. கே. சாமி சொடுவாளால் குத்திக் கொலை செய்யப்பட்டார். உடையார்பாளையம் வேலாயுதம் தூக்கு மாட்டப்பட்டார். நெல்லிக்குப்பம் பஜீது கொலை செய்யப்பட்டார். எந்த மந்திரியும் ஆடவில்லை; அசையவில்லை! பதவி நாற்காலியை விட்டு ஓடவுமில்லை!

அண்மையிலே குடந்தையில் இராமலிங்கம் கொலை செய்யப்பட்டார். சனம் பக்தவத்சலத்திற்கு, ரோஷம் பிறக்கவில்லை, தன் திறமையைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை! "மூட்டைப் பூச்சி மருந்து சாப்பிட்டார், நான் என்ன செய்ய" என்று தன் பதவியைக் காத்துக் கொண்டார்!

இவைகள் தான் கிடக்கட்டும்! உலகம் போற்றும் உத்தமர் காந்தியார் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்! காந்தியாரை பாதுகாக்க வழியற்ற மந்திரிகள், துப்பற்ற மந்திரிகள் திறமையற்ற மந்திரிகள்—எவராவது பதவியைத் துறந்து ஜனநாயகத்தின் பெருமையை காத்திட முன்வந்தார்களா?

ஜப்பானும் நாடுதான்! இந்தியாவும் நாடுதான்! அங்கேயும் மனிதர்கள்தான் அமைச்சர்களாக இருக்கிறார்கள்—இங்கேயும் மனிதர்கள்தான் அமைச்சர்களாக இருக்கிறார்கள்! இருந்தும் என்ன பயன்?

அங்கே மானம் பெரிது!

இங்கே மதிப்பு பெரிது!

அங்கே கடமை பெரிது!

இங்கே காசு பெரிது!

அங்கே நாடு பெரிது!

இங்கே தன் வீடு தான் பெரிது!

இந் நாட்டிற்கு எந்த நாடு ஈடு! நம் சொந்த நாட்டிற்கு ஈடு வேறு எந்த நாடு!

அன்று 5 கோடியால் தேர்தலில் வெற்றி பெற்ருர்கள்

இன்று எத்தனை கோடியால் வெற்றி பெறுவார்களோ ?

(10ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை" என்று கூறினர்.

இந்த செய்தியை வெளிநாட்டார் கேள்விப்பட்டால் நமது அரசியலைப்பற்றி என்ன நினைப்பார்கள். நாம் அப்படிப்பட்ட நிலை உண்டாகும்படி நடந்து கொள்ளவே கூடாது.

நான் இப்படிக் கூறுவது நண்பர் ஆரியசங்காரனுக்குப் பிடிக்காது.

"என்ன நமது அண்ணு இப்படிக் கூறுகிருர். அவர்கள் அடித்தாலும் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டுமாமே." என்று நினைப்பார். அரசியல் கட்சிக்கு வந்தால் அப்படித்தான் இருக்கவேண்டும்.

"பாக்சிங் செய்து அவரவர்கள் பலத்தைப் பார்கக வேண்டுமென்ருல் எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்திற்குப் போய் பலப் பரீட்சைச் செய்து கொள்ளலாம்.

சந்துமுனையிலும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களிலும் அவ்விதம் செய்ய வேண்டுமென்று நினைக்கக் கூடாது. அப்படிச் செய்வது தான் வீரமென்று எண்ணக் கூடாது.

நம்முடைய தோழர்கள் இந்த மாதிரியான காரியங்களில் ஈடுபடுகிருர்கள் என்று தெரிந்தால் வேதனைப்படுவேன். அநாகரிகச் செய்கைகளில் நமது தோழர் ஈடுபட்டார்கள் என்ற செய்தி வந்தால் அது எனக்குத் தாங்க முடியாத அவமானத்தைத் உண்டாக்கும். எனக்கு முன் பேசியவர் கூறினர். "போக்கிரிகளும் ரௌடிகளும் தாக்குகிருர்கள்" என்று. எனக்குத் தெரியுமே இன்று போக்கிரிகள் பெரிய பயில்வானகள் என்று சொன்னவர்கள் நிலை என்னவாயிற்றென்று. தட்டிக் கே பவ கள் இல்லாதிருக்கும்வரை போககிரிகளாக இருப்பார்கள்.

ஆகஸ்டிலிருக்கும் போக்கிரிகள் செப்டம்பரில் மாறி விடுகிருர்கள். செம்டம்பரில் இருப்பவர்கள் அக்டோபரில் அடங்கி விடுகிருர்கள். எங்கள் ஊராகிய காஞ்சிபுரத்தில்நடைபெற்ற ஒரு சபவத்தை உங்களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

"கிருஷணன், கிருஷ்ணன்" என்று வலிமை பொருந்தியவர் ஒருவர் இருந்தார். அவர் தெருக்களில் வந்து சத்தம் போட்டு அட்டகாசம் செய்து பயமுறுத்தி வந்தார். அவரைக் கண்டு ஊரிலுள்ளோர் அனைவரும் பயந்து கதவை மூடிக் கொள்வார்கள். கடைசியில் எங்கள் தெருவில் ஒரு பலமற்ற பால்காரர் ஒருவரால் அடக்கப்பட்டார். அன்று எல்லோரையும் பயமுறுத்திய பயில்வான் கிருஷ்ணன் சாதுவாகிவிட்டார்.

ஆகவே மாஜி போக்கிரிகள் வரலாறுகளே இப்படி இருக்கும்போது இப்போதுள்ளவர்களைப்பற்றி நாம் ஏன் கவலைப் படவேண்டும்.

நம்மை கத்தியால் குத்தி நம்மை கொல்லும் நிலை ஏற்பட்டாலும் "திராவிடநாடு தேவை" "நாடு விடுதலை அடைய வேண்டும்" என்று இலட்சிய முழக்கம் செய்ய வேண்டும். எந்தவித இடுக்கண்கள் — இன்னல்கள் ஏற்பட்டாலும் அதைக் கண்டு வேதனைப்படக் கூடாது.

இன்று நாட்டில் நமது கொள்கைகள் எப்படி வளர்ந்துள்ளது என்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

நான் சென்று வந்துள்ள கிராமங்களில் நடந்ததை பார்த்ததும் ஆச்சரியப்பட்டு விட்டேன்.

நான் முன்பு செல்லும்போது என்னை வரவேற்க அந்த ஊர்களிலுள்ள வாலிபர்கள் சின்னஞ் சிறு வயதுடையவர்கள் அதாவது 20-25-30 வயதுக் குட்டவர்கள் வரவேற்க வருவார்கள.

இன்றைய நிலை என்ன ? வயதான பெரியவர்கள முன்பு நம்மை எதிர்த்தவர்கள், மாலைகளுடனும் கையில் தட்டுகளுடனும் வாத்தியங்களை வைத்துத் அழைத்துச் செல்லுகிருர்கள்.

நமது தோழர்கள் இன்று கிராமத்திற்குச் செல்வதை ஒரு பெரிய மகிழ்ச்சியாகவும், திருநாளைப் போலவும் கொண்டாடுகிருர்கள்.

பெரியவர்கள் எல்லாம்நம்மை வரவேற்பதில் பெரிய பெருமையாகவே கருதி வந்தார்கள்.

இதற்குக் காரணம் என்ன ? நாம் அமைச்சர்கள் என்ருே, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ருே, நம்மால் ஏதாவது நன்மைகள் கிடைக்குமென்ருே எண்ணி நம்மை வரவேற்கவில்லை.

இந்த கிராமங்களுக்கு நமது முதல் அமைச்சர் காமராசரும் சென்றிருக்கிருர். அங்குள்ள பெரியவர்களை அழைத்து வலியப் போய்,"இந்த கிராமத்திற்கு என்ன தேவை" சொல்லுங்கள் என்று கேட்கிஞர்.

அவர் எதை மனதில்கொண்டு இப்படிக் கேட்கிருர் என்ருல் "என்ன தேவை" என்று கேட்டால் அமைச்சர் கேட்கிருர் என்ன சொல்வது, "ஒன்றும் தேவை இல்லை- எல்லாம் இருக்கிறது" என்று சொல்லி விடுவார்கள் என்று நினைத்துக்கேட்கிருர், இது முன்பிருந்தது. இன்று நிலைதான் மாறி விட்டதே.

கிராமத்திலுள்ளவர்கள் என்ன நினைக்கிருர்கள். "நாம் வரி கொடுக்கிருேமே, நமது தேவைகளைக் கேட்கும் உரிமை நமக்கு உண்டு என்ற எண்ணுகின்றனர். மந்திரி சாமராசர் "என்ன இந்த ஊருக்குத் தேவை" என்று கேடடதும் அவன், உடனே கூறி விடுகிருன். "என்ன இருக்கிறது, எல்லாம்தான் தேவை இருக்கிறது." "நீங்கள்தான் காரில் வரும் போது பார்த்திருப்பீர்களே பாதை எப்படி இருக்கிறது என்று. ரோட்டு வசதி கிடையாது, தண்ணீர் வசதி கிடையாது, ஆஸ்பத்திரி இல்லை பள்ளிக்கூடம் இல்லை.வாய்க்கால்கள் இல்லை. இந்த கிராமத்தில் விவசாயம் செய்ய முடியாது. எல்லோரும் நகர் புறங்களுக்கு ஓடி விடுகிருர்கள். இங்கு 200 விவசாயிகள் இருந்திருந்தால், இன்று 100 பேர்கள் இருப்பதே கஷ்டமாக இருக்கிறது. கைவண்டி இழுக்கவும், ரிக்ஷா இழுக்கவும் பட்டணம் போன்ற இடங்களுக்குப் போய் விடுகிருர்கள்" என்று அந்தக் கிராமத்து

(8ம் பக்கம் பார்க்க)